**<u>மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்</u>**
**<u>ந.க.எண்.48/ஒபக/2020, நாள் :25.01.2021</u>**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – 2020–21ஆம் கல்வியாண்டு – அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் இளைஞர் மற்றும் சூழல் சார் மன்றங்கள் ஏற்படுத்துதல் (Youth & Eco Club) – நிதி விடுவித்தல் மற்றும் வழிகாட்டுதல் வழங்குதல் – சார்பு.

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் (ஒபக) செயல்முறைகள் ந.எண். 606/C6/SS/2020, நாள்: 21.01.2021

******

பார்வையில் கண்டுள்ளபடி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக பள்ளியின் வளர்ச்சியிலும், சமுதாயத்தின் மேம்பபாட்டிலும், இன்றைய இன்றியமையாத் தேவையான சுற்றுப்புற சூழலை பாதுகாத்தவிலும் மாணவர்களை ஈடுபடுத்தும் நோக்கில் அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளிலும் இளைஞர் மற்றும் சூழல் சார் மன்றம் (Youth & Eco Club) ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2020–21 ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.25000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இம்மன்றங்களின் நோக்கம்**, உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் இம்மன்றங்கள் வாயிலாக, நமது கலாச்சாரம், இலக்கியம் மற்றும் அது சார்ந்த விழிப்புணர்வு செயல்பாடுகளை மேற்கொள்வதுடன், பள்ளியின் கட்டமைப்பு, நூலகம் மற்றும் பள்ளி மைதானம் போன்றவற்றைப் பராமரிக்கும் பணிகளையும் மேற்கொள்வதும், பள்ளி வளாகத்திற்குள் பசுமைக் காய்கறித் தோட்டம், மருத்துவ மூலிகைச் செடிகளை வளர்ப்பது, அரசு மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு, மாணவர்களிடையே அறிவியல் மற்றும் கணித பாடத்தின் மீதான ஆர்வம் மற்றும் விளையாட்டின் மீதான ஆர்வத்தை அதிகரித்தல், மழைநீர் சேகரிப்புத்திட்டம், நோய்த் தடுப்பு, போதை பொருளின் தீங்கு, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சார்ந்த விழிப்புணர்வு பிரச்சாரங்களைப் பொதுமக்களிடம் எடுத்துச் செல்வது போன்ற பணிகளை மேற்கொள்வதும் ஆகும்.

**பள்ளிகளுக்கான வழிகாட்டுதல்கள் :**

1. அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளிலும் 5 முதல் 20 மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கீழ்க்கண்ட இளைஞர் மன்றங்கள் தொடங்கப்படுதல் வேண்டும். அனைத்து மன்றங்களும் இணைப்பில் உள்ளவாறு செயல்படுதல் வேண்டும்.
   I. கலை, இலக்கிய, கலாச்சார மன்றம்
   II. சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் பசுமைப்படை
   III. விளையாட்டு மன்றம்
   IV. அறிவியல், கணித மற்றும் கணினி மன்றம்
   V. நூலக மன்றம்
   VI. பாதுகாப்பு மன்றம்
2. இரு பாலர் பள்ளி எனில் மன்ற உறுப்பினர்களில் மாணவ, மாணவியர் எண்ணிக்கை சம்மாக இருக்க வேண்டும்.
3. மேற்காண் ஒவ்வொரு மன்றத்திற்கும் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரை மன்ற உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.
4. ஒவ்வொரு பள்ளியின் தலைமை ஆசிரியர் / உதவி தலைமை ஆசிரியர் இம்மன்ற செயல்பாடுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.
5. ஒவ்வொரு பள்ளியும் மேற்காண் அனைத்து மன்றங்களுக்கான செயல்பாடுகளுக்கு தெளிவான Action plan with calendar of activity தயாரித்து அதன்படி செயல்படுதல் வேண்டும். கண்டிப்பாக மாதம் ஒருமுறை மன்றங்கள் கூடி மன்ற செயல்பாடுகளை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. சுழற்சி முறையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு ஆசிரியரை Nodal Officer – ஆக நியமித்து பள்ளி நேரம் முடிந்த பிறகு மன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்ய வேண்டும்.
7. பள்ளி வேளை நேரம் முடிந்த பிறகும் மற்றும் விடுமுறை நாட்களிலும் பள்ளியின் மைதானம், விளையாட்டு உபகரணங்கள், நூலகம், music, arts room, auditorium போன்றவற்றை மன்ற உறுப்பினர்களின் முழுமையான முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.
8. பெற்றோர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரை மாணவர்களுக்கு வழிகாட்டவும் மாணவர்களுடன் பயனுள்ளவாறு நேரத்தை செலவிடவும் அனுமதிக்க வேண்டும்.
9. பள்ளிகளில் அனைத்து மன்றங்களின் செயல்பாடுகள் சார்ந்த calendar of activity, EMIS Portal – இல் பதிவு செய்யப்பட வேண்டும்.
10. அனைத்து மன்றங்களும் தங்களது மன்றத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரின் விவரங்கள், மாத வாரியாக தங்களது மன்ற செயல்பாடுகள், செலவினங்கள் சார்ந்த பதிவேடுகளை (Register) மாணவர்கள் வாயிலாகவே பராமரிக்க வேண்டும்.
11. மன்ற செயல்பாடுகள் மற்றும் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், திறன் சார்ந்த பயிற்சி அளித்தல் ஆகியவற்றுக்கு நிதியை பயன்படுத்தி அதற்கான பற்றுச்சீட்டுகளை முறையாக பராமரிக்க வேண்டும்.

**நிதி பயன்பாடு (பள்ளி ஒன்றுக்கு) :**

| வ.எண். | செலவின விவரம் | உயர் / மேல்நிலைப் பள்ளிகள் |
|---|---|---|
| 1 | பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் மாணவர்களுக்கான தேநீர் செலவினம் | 12 Months X Rs.200=Rs.2400/- |
| 2 | பரிசு மற்றும் சான்றிதழ் வழங்குதல் | Rs.600/- |
| 3 | **மன்ற செயல்பாடுகள்** | |
| | கலை, இலக்கிய, கலாச்சார மன்றம் | Rs.3500/- |
| | சுற்றுச்சூழல் மன்றம் மற்றும் பசுமைப் படை | Rs.3500/- |
| | விளையாட்டு மன்றம் | Rs.5000/- |
| | அறிவியல், கணித மற்றும் கணினி மன்றம் | Rs.2000/- |
| | நூலக மன்றம் | Rs.3500/- |
| | பாதுகாப்பு மன்றம் | Rs.3500/- |
| | மொத்தம் | Rs.21000/- |
| 4 | Digital Board (All Club Activities) | Rs.1000/- |
| **Grand Total** | | **Rs.25000/-** |

**1. கலை, இலக்கிய, கலாச்சார மன்ற செயல்பாடுகள்:**

1. இம்மன்றத்திற்கான பொறுப்பாளராக தமிழ் / சமூக அறிவியல் ஆசிரியர் இருத்தல் வேண்டும். இவரது மேற்பார்வையில், மன்ற உறுப்பினர்களே, மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி, ஓவியப் போட்டி ஆகிய போட்டிகளை நடத்தி அவர்களிடையே மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர வாய்ப்பளிக்க வேண்டும்.
2. மேலும் பள்ளி அளவிலான அனைத்துப் போட்டிகளையும் மாணவர்களே முன்னின்று நடத்துவதன் மூலம் மாணவர்களுக்கு தலைமைப் பண்பு வளரும்.
3. போட்டிகளில் வென்றவர்களுக்கு சிறு சிறு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவித்தல் வேண்டும். **தொடக்க நிலை மாணவர்களுக்கு ஓவியப் போட்டி மட்டும் நடத்துதல் வேண்டும். மாணவர்களால் வரையப்படும் சிறந்த ஓவியங்களை வண்ணம் தீட்ட தேவையான பொருட்களை வழங்கி பள்ளி வளாகத்தில் வரையச் செய்தல் வேண்டும்.**
4. **போட்டிகளுக்கான தலைப்புகள்:**

   பே¢R¥ ngh£o – எக்காலத்திற்கும் பொருந்தும் தமிழ் மொழி

   கட்டுரை போட்டி – பண்டைய தமிழர்களின் வாழ்வியல் நெறிகள்

   ஓவியப் போட்டி – அக்கால தமிழர்களின் விளையாட்டுகள்
5. மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக நடத்தப்படும் Rangotsav, Kala Utsav, Language Festival ஆகிய நிகழ்வுகளை பொறுப்பேற்று நடத்துதல் வேண்டும். மாதிரி Student Parliament நிகழ்வுகளை மன்ற உறுப்பினர்களைக் கொண்டு நடத்துதல் வேண்டும்.

**2.சுற்றுச்சூழல் மன்றம் பசுமைப் படை செயல்பாடுகள்:**

1. இம்மன்றத்திற்கான பொறுப்பாளராக தாவரவியல் / அறிவியல் ஆசிரியர் இருத்தல் வேண்டும். இவரது மேற்பார்வையில், பள்ளி, பள்ளி வளாகம், விளையாட்டு மைதானம் மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரித்தல், இயற்கை வளங்களை பாதுகாத்தலின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை மன்ற உறுப்பினர்கள் மாணவர்களிடையே ஏற்படுத்துதல் வேண்டும்.

2. நெகிழி பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்தல், சுற்றுச் சூழல் தூய்மை சார்ந்து பள்ளி சுவற்றில் மாணவர்களைக் கொண்டே ஓவியம் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும். பள்ளியில் வகுப்பறையை தூய்மையாக வைத்திருக்கும் வகுப்பு மாணவர்களுக்கு பரிசளித்து மகிழ்விக்கலாம்.
3. பள்ளி வளாகத்தில் காலியாக உள்ள பயன்படுத்தப்படாத இடங்களில் மற்றும் வீடுகளில் மரம் நடுவதன் அவசியம் மற்றும் இயற்கையை நேசித்தல் பற்றிய விழிப்புணர்வை மன்ற உறுப்பினர்கள் மாணவர்களிடையே ஏற்படுத்துதல் வேண்டும்.
4. பள்ளிகளில் காய்கறி மற்றும் மூலிகை தோட்டம் அமைத்து பராமரிக்க வேண்டும். மாணவர்களின் பிறந்த நாளின் போது அவர்களுக்கு மரக்கன்றுகள் பரிசளித்து அவர்களை வாழ்த்தி மரம் நடுவதன் அவசியத்தை உணர்த்தலாம்.
5. மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் வாயிலாக வழங்கப்படும் School Grant, Youth & Eco Club Activities ஆகியவற்றுக்கான செயல்பாடுகளுக்கு பொறுப்பேற்று ஆலோசனை வழங்குதல் மற்றும் அதற்கான பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.

**போட்டிகளுக்கான தலைப்புகள்:**

ஓவியப் போட்டி – காலநிலை மாற்றம் (Climate Change)

**3.விளையாட்டு மன்ற செயல்பாடுகள்:**

1. இம்மன்றத்திற்கான பொறுப்பாளராக PET ஆசிரியர் இருத்தல் வேண்டும். இவரது மேற்பார்வையில், மன்ற உறுப்பினர்களே, மாணவர்களுக்கு தனிநபர் மற்றும் குழு விளையாட்டு போட்டிகள் (உள், வெளி அரங்க போட்டிகள்) நடத்திட வேண்டும்.
2. தனிநபர் போட்டி: 100 மீ ஓட்டம் ( தொடக்க நிலை மாணவர்களுக்கு)
   200 மீ ஓட்டம் ( நடுநிலை மாணவர்களுக்கு)
   400 மீ ஓட்டம் (உயர்/மேல்நிலை மாணவர்களுக்கு) மற்றும்
   நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எரிதல், ஈட்டி எரிதல்.

   குழு விளையாட்டு போட்டி : கால் பந்து, இறகுப் பந்து, கோ–கோ, கபடி
3. பள்ளி அளவிலான விளையாட்டுப் போட்டிகளையும் முன்னின்று நடத்தி மாணவர்களிடையே மறைந்திருக்கும் திறன்களைக் கண்டறிந்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பதன் வாயிலாக மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.

4. மேலும் போட்டிகளில் வென்றவர்களுக்கு சிறு சிறு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவித்தல் வேண்டும். மாணவர்கள் மைதானத்திற்கு சென்று விளையாடுவதன் வாயிலாக அவர்களுடைய உடல் நலம், மனநலம் மேம்படும்.
5. மன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக வழங்கப்படும் Sports Grant வாயிலாக பள்ளிக்குத் தேவையான கொள்முதல் செய்யவேண்டிய உபகரணங்கள் பற்றி தலைமையாசிரியருக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

**<u>4.அறிவியல், கணித மற்றும் கணினி மன்ற செயல்பாடுகள்:</u>**

1. இம்மன்றத்திற்கான பொறுப்பாளராக இயற்பியல் / வேதியியல் / கணினி அறிவியல் ஆசிரியர் இருத்தல் வேண்டும். இவரது மேற்பார்வையில், மன்ற உறுப்பினர்கள் பள்ளி அளவில் அறிவியல் கண்காட்சி, வினாடி வினா போட்டி மற்றும் கீழ்க்கண்ட அறிவியல், கணிதம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்துதல் வேண்டும்.
   I) அறிவியல், கணித அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவர்களது கண்டுபிடிப்புகள் பற்றிய விவாதம்.
   II) அறிவியல், கணித அறிஞர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடுதல்
   III) அறிவியல், கணிதம் சம்பந்தப்பட்ட charts, Posters, Models தயாரித்தல்
   IV) அறிவியல், கணிதம் சம்பந்தப்பட்ட செய்திகளை பள்ளிகளில் காட்சிப்படுத்துதல்
   V) அறிவியல் அருங்காட்சியகங்களை பார்வையிடுதல், வினாடி வினா போட்டி நடத்துதல்
2. மேற்காண் செயல்பாடுகளால், மாணவர்களிடையே அறிவியல், கணித பாடத்தின் மீதான படிக்கும் ஆர்வத்தினை ஊக்குவித்தல், தந்போதுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை தெரிந்து கொள்ளச் செய்வதோடு அதற்கேற்ப அறிவியல், கணிதம் சார்ந்த திறன்களை வெளிக்கொணர ஒரு வாய்ப்பை ஏற்படுத்தலாம்.
3. மேலும் மாணவர்களிடையே தலைமைப் பண்பு, குழு மனப்பான்மை, ஆரோக்கியமான கலந்துரையாடல் மற்றும் விவாதம் செய்யக்கூடிய சூழலை உருவாக்கவும் அதன் வாயிலாக தேசிய அளவிலான அறிவியல் மற்றும் கணித Olympiad போட்டிகளில் மாணவர்களை பங்கேற்க செய்யலாம்.

4. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக நடத்தப்படும் Science Exhibition, Quiz competition போன்றவற்றை பள்ளி அளவில் நடத்துதல், அறிவியல், கணித உபகரணங்களை பராமரித்தல் வேண்டும்.
5. பள்ளிகளில் உள்ள Hi- Tech Lab ஆய்வகத்தை முழுமையாக பயன்படுத்தும் விதமாக பதிவேடுகளை பராமரிக்க வேண்டும். இதற்கு இக்குழுவினை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

**5.நூலக மன்ற செயல்பாடுகள்:**

1. இம்மன்றத்திற்கான பொறுப்பாளராக உதவி தலைமையாசிரியர் இருத்தல் வேண்டும். இவரது மேற்பார்வையில், மன்ற உறுப்பினர்கள் பள்ளியில் உள்ள அனைத்து வகுப்பினரும் மாதம் ஒருமுறை நூலகம் வந்து படிக்கும் வகையில் கால அட்டவணை தயார் செய்து அதனை நடைமுறைப் படுத்த வேண்டும்.
2. இதன் வாயிலாக மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்தும் விதத்தை தெரிந்து கொள்வதோடு மாணவர்களின் வாசிப்பு திறன் மற்றும் படிக்கும் ஆர்வம் மேம்படும். மாணவர்கள் தாங்களே பள்ளி சார்ந்த கையெழுத்து செய்தி தாள் தயாரித்து அதனை பள்ளியிலுள்ள அனைவருக்கும் வழங்கலாம்.
3. மாணவர்களிடையே வாசிப்புத் திறனை வளர்க்கும் விதமாக அனைத்து பள்ளிகளும் வாசிப்பு தினத்தன்று அனைத்து மாணவ மாணவியரையும் நூல்களை வாசிக்கச் செய்ய வேண்டும்.
4. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக வழங்கப்படும் நூலக மானியம் மூலம் நூலகத்திற்கு தேவையான கொள்முதல் செய்யவேண்டிய நூல்கள் பற்றி தலைமையாசிரியருக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

**6.பாதுகாப்பு மன்ற செயல்பாடுகள்:**

1. இம்மன்றத்திற்கான பொறுப்பாளராக NSS/ NCC Master இருத்தல் வேண்டும். இவரது மேற்பார்வையில், மன்ற உறுப்பினர்கள் பள்ளி மாணவர்களிடையே பாதுகாப்பு, நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், போதை பொருளால் ஏற்படும் தீங்கு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும்.
2. குறிப்பாக பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, உடல் நலம், மன நலம், தன்சுத்தம் பராமரித்தல், அவர்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உண்ண வேண்டியதன் அவசியம், RTE, POCSO பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.

3. கராத்தே, ஜூடோ மற்றும் டைக்வோண்டோ ஆகிய தற்காப்பு கலைகள் சார்ந்த அடிப்படை பயிற்சியினை, பள்ளியின் அனைத்து மாணவியர்களுக்கும், நன்கு பயிற்சி பெற்ற பெண் பயிற்சியாளர்கள் மூலம் பொறுப்பு ஆசிரியரின் மேற்பார்வையில் மாதத்திற்கு ஒரு முறை வழங்கப்படுகிறது. இதனை இக்குழுவின் மூலம் கண்காணிக்கலாம்.
4. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக நடத்தப்படும் Safety & Security,Self Defense, Adolescent Programme for Girls and Mensural health Management Activities ஆகியவை சார்ந்த பயிற்சியின் தாக்கத்தை பிற மாணவர்களிடையே கொண்டு சேர்க்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிவுரைகளின்படி அனைத்து பள்ளிகளிலும் அனைத்து மன்றங்களின் செயல்பாடுகளும் calendar of activity படி நடத்திடவும். சார்ந்த புகைப்படங்களுடன் கூடிய தொகுப்பறிக்கை, பயன்பாட்டு சான்றிதழை மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>இணைப்பு :</u> அனைத்து மன்ற செயல்பாடுகள்.

25.1.21

மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்
மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் (ஒபக)
வேலூர்.

25/1/21

<u>பெறுநர் :</u>

அனைத்து வகை அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்

<u>நகல்:</u>

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர்
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்–வேலூர், அரக்கோணம், இராணிப்பேட்டை, வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர்.
3. அலுவலக கோப்பிற்கு.